TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8075251

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : VELLORE
மாவட்டம்
PS: VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No. 14/2020
மு.த.அ. எண்
Date: 07.11.2020
நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 as amended by the P.C. (Amendment) Act 2018.
Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988 as amended by the P.C. (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 06.11.2020
நாள் முதல்
Date to : 07.11.2020
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : 18.10 hrs
நேரம் முதல்
Time to : 05.00 hrs
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 07.11.2020
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 05.00 hrs.
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOLUME-II 2020 07.11.2020
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 05.00 hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : TAMIL TYPED COMPLAINT.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: NORTH EAST DIRECTION. 5 KMs
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : OFFICE OF THE ASSISTANT DIRECTOR (PANCHAYAT), VELLORE IN COMBINED RURAL DEVELOPMENT CAMPUS, VELLORE
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : —
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. JOTHI
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ ~~Husband~~'s Name : SAMPATH
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1965
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : INDIAN
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Dy. Inspection Cell Officer.
தொழில்
(g) Address : OFFICE OF THE DISTRICT INSPECTION CELL OFFICE, VELLORE COLLECTORATE, VELLORE.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. R. SENTHILVEL (A1/2020) S/o Ramasamy, Assistant Director (Panchayat), Combined Rural Development campus, Sathuvachari, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

"NO DELAY"

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 7/11/2020
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.11.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.S. HEMACHITHRA
Rank: நிலை DY. SUPDT. OF POLICE, No. எண் VIGILANCE & ANTI-CORRUPTION VELLORE.

**SUBMITTED:**

இன்று 07.11.2020-ஆம் தேதி காலை 05.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள், சத்துவாச்சாரி, வேலூர்-9 என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள், சத்துவாச்சாரி, வேலூர்-9. பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், நான் வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு துணை ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். வேலூர் சத்துவாச்சாரியில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு அருகில் உள்ள புதியதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.செந்தில்வேல் என்பவர் ஊராட்சிகளின் பொதுப்பணிகளான குடிநீர் பணிகள், மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், தெருவிளக்கு பணிகள் மற்றும் இதர அடிப்படை பணிகளுக்கு நிர்வாக அனுமதிக்காக கோப்பினை பார்வையிடுவதற்காகவும், ஊராட்சிகளின் பொதுப்பணி செய்து முடித்தமைக்கு தொகை விடுவிப்பு சம்மந்தப்பட்ட கோப்பினை பார்வையிடுவதற்காகவும், மேலும், பொதுப்பணி திட்டங்களுக்கு மாதாந்திர ஒத்திசைவு செய்வது போன்ற அரசுப்பணிகளை செய்வதற்கு மாதாந்திர முறையில் சம்மந்தப்பட்ட ஊராட்சிகளில் இருக்கும் ஊராட்சி செயலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட காண்ட்ராக்டர்களிடமும் கையூட்டு பெறுவதாக லஞ்சமாக பணம் பெறுவதாக மாலை சுமார் 17.00 மணிக்கு எனக்கு கிடைத்த நம்பகமான தகவலை, நான் தகவலர்கள் மூலம் நான் உறுதி செய்துக்கொண்டு, நேற்று 06.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து அலுவலகத்தில் இருந்த வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் ஆகிய தங்களிடம் தகவல் தெரிவித்து, மாவட்ட ஆய்வுக்குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் இணைந்து, நேற்று 06.11.2020-ஆம் தேதி மாலை சுமார் 18.10 மணிக்கு மேற்படி வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக

வளாகம் மற்றும் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகத்தில் நுழைந்தபோது உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.R.செந்தில்வேல் அவர்கள் சில்வர் க்ரே நிற மாருதி ஆல்டோ பதிவு எண்.TN 28 AJ 0225 காரில் புறப்பட தயாரானவரை தடுத்து நிறுத்தி குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் சோதனைக்கு வந்திருப்பதை அவரிடம் விளக்கியும், அவர் முன்பு சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. மேற்படி உதவி இயக்குனர் திரு.R.செந்தில்வேல் அவர்களை அவர் உட்கார்ந்திருந்த கார் குறித்து விசாரிக்க, அவர் அதை தன்னுடைய கார் என்று சொன்னார். மேற்படி காரை சோதனையிட, அந்த காரில் இருந்த ஓட்டுனரை விசாரிக்க, அவர் தன் பெயர் A.செந்தில்குமார் வயது 34/2020, த/பெ அர்ஜூனன், 5/85, காமாட்சியம்மன் கோவில் தெரு, பேலுகுறிச்சி அஞ்சல், சேந்தமங்கலம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்றும், தான் திரு.செந்தில்வேல் அவர்களின் ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வருவதாக சொன்னார். பின்னர், உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் அவர்களை திரேக சோதனை செய்ய, திரு.செந்தில்வேல் அவர்களின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் 500 ரூபாய் நோட்டுகள் கத்தையாக இருந்தது. இதனை பற்றி திரு.செந்தில்வேல் அவர்களிடம் கேட்க, அவர் அதில் எவ்வளவு பணம் உள்ளது என்பது தனக்கு தெரியாது என்று கூறிய பிறகு அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் மொத்தம் ரூ.20,000/- இருந்தது, அவரது சட்டையின் வெளிப்புற பாக்கெட்டில் ரூ.200/- இருந்தது. பின்னர், மாருதி ஆல்டோ பதிவு எண்.TN 28 AJ 0225 காரை சோதனை செய்ய, ஓட்டுனர் இருக்கையின் சீட் கவருக்கு பின்னால் செய்தித்தாள் மற்றும் ஆவணங்களை வைக்கும் பையில் கத்தையாக பணம் இருந்தது, இதனை பற்றி திரு.செந்தில்வேல் அவர்களிடம் கேட்க, அவர் அதில் எவ்வளவு பணம் உள்ளது என்பது தனக்கு தெரியாது என்று கூறிய பிறகு அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.12,500/- இருந்தது. மேற்படி பணம் ரூ.20,000/- மற்றும் ரூ.12,500/- ஆகியவை பற்றி திரு.செந்தில்வேல், உதவி இயக்குனர் அவர்களிடம் விசாரிக்க, அவர் தீபாவளிக்காக புதுத்துணி வாங்க வைத்திருந்த பணம் என்று சொன்னவரை, எங்கிருந்து இந்த பணம் வந்தது என்று கேட்க, அவர் பதிலேதும் கூறாமல் மௌனமாக இருந்தார். தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் கணக்கு கூற இயலாத பணம் (ரூ.20,000/- மற்றும் ரூ.12,500/-) அவரிடம் இருந்து வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.செந்தில்வேல் அவர்களின் சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.200/- அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் ஓட்டுனர் திரு.செந்தில்குமார் என்பவரை

சோதனை செய்ய, அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.21,500/- இருந்தது. அந்த பணத்தை பற்றி ஓட்டுனர் திரு.செந்தில்குமார் என்பவரிடம் விசாரிக்க, அவர் மேற்படி பணம் ரூ.21,500/-ஐ உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் தன்னிடம் கொடுத்து வைத்துக்கொள்ளுமாறும், விஜிலென்ஸ் சோதனை அதிகமாக உள்ளதால் ஊருக்கு போனவுடன் அவரிடம் கொடுக்குமாறு சொல்லி கொடுத்த பணம் என்று சொன்னார். எனவே, மேற்படி பணம் வழக்கு நிமித்தமாக திரு.செந்தில்குமார் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர், உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் மற்றும் ஓட்டுனர் திரு.செந்தில்குமார் ஆகியோர்களுடன் இருதுறை திடீர் கூட்டு சோதனை குழுவினர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக கட்டிடத்திற்குள் சென்று, உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் அவரது அறையை சோதனை செய்ய, அங்கு பணம் ஏதும் இல்லை. பின்னர், உதவி இயக்குனர் அறைக்கு அருகில் இருந்த பதிவேடுகள் அறையை சோதனை செய்ய அங்கு பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையில் பணம் ஏதும் இல்லை. பின்னர், உதவி இயக்குனர் அறைக்கு எதிர் திசையில் இருந்த கணினி அறையை சோதனை செய்ய சென்று பார்க்க, அங்கு அப்போது திருமதி.K.R.லட்சுமிபாய், சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் திரு.A.J.விமல்குமார், ஒப்பந்த பணியாளர் (Programmer) ஆகியோர் இருந்தனர். அவர்களை சோதனை செய்ய, திரு.விமல்குமார் என்பவரிடம் ரூ.1,190/-ம், திருமதி.K.R.லட்சுமிபாய் அவர்களிடம் ரூ.430/- இருந்தது. அந்த பணம் குறித்து இருவரிடமும் விசாரிக்க, அவர்கள் அதற்கு தக்க முகாந்திரம் கூறியதால் மேற்படி பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்படவில்லை. பின்னர், கணினி அறைக்கு அருகில் இருந்த அலுவலக அறையை சோதனை செய்ய, அங்கு கண்காணிப்பாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.V.ஸ்வர்ணலதா என்பவர் இருந்தார். அவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரூ.780/- இருந்தது. அந்த பணம் குறித்து அவர் தகுந்த முகாந்திரம் கூறியதால் அதனை வழக்கு நிமித்தம் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அலுவலக அறைக்கு வெளியில் வராண்டாவில் நின்றிருந்த நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் K.முருகேசன் (44) என்றும், தந்தை பெயர் கிருஷ்ணன் என்றும், அவர் எண்.168/1, பாரதி நகர், கணியம்பாடி, வேலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் பள்ளிக்கட்டிடம் மற்றும் நீர்த்தேக்க தொட்டி ஒப்பந்ததாரர் என்றும், உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் அவர்களை ஒரு வேலையாக பார்க்க அலுவலகத்திற்கு வந்ததாகவும், அப்போது உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கலந்தாய்வு கூட்டம் முடித்து சுமார் 18.00 மணிக்கு

அலுவலகம் வந்தவரை அவரது அறையில் ஏற்கனவே அங்கு காத்திருந்தவர்கள் சந்தித்து பேசிக்கொண்டு இருந்தமையால் உதவி இயக்குனரை தனியாக சந்திக்க வேண்டுமென்று தான் காத்திருந்ததாகவும், ஆனால் உதவி இயக்குனர் அவரது அறையில் இருந்து சட்டென்று வெளியில் வந்தவர் காரில் ஏறி புறப்பட தயாரானபோது விஜிலென்ஸ் போலீசார் திடீர்சோதனைக்கு வந்து தடுத்து நிறுத்தினீர்கள் என்று சொன்னவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரூ.38,000/- இருந்தது. அந்த பணம் குறித்து விசாரிக்க, அவரால் தக்க முகாந்திரம் கூற இயலவில்லை என்பதால் அந்த பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.ஸ்வர்ணலதா என்பவரிடம் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலக பதிவேடுகள் மற்றும் கடந்த சில நாட்களாக திரு.செந்தில்வேல் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட முக்கிய கோப்புகளை கேட்க, அவர் 1) உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலக வருகை பதிவேடு, 2) மாவட்ட ஆட்சித்தலைவர் கையொப்பமிட்ட அணைக்கட்டு, குடியாத்தம், கீ.வ.குப்பம், கணியம்பாடி, காட்பாடி, பேரணாம்பட்டு மற்றும் வேலூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகளுக்கு LED Mini Highmast Light அமைத்திட நிர்வாக அனுமதி 5.11.2020 அன்று வழங்கிய அ2/998/2020 எண்ணிட்ட அலுவலக குறிப்பு கோப்பு, 3) மாவட்ட ஆட்சித்தலைவர் கையொப்பமிட்ட (Tied and Untied amount) கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியத்திற்கு Jaljeevan Mission convergence திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் / பழங்குடியினர் பயன்படுத்த குடிநீர் பணிகள் மேற்கொண்ட நிர்வாக அனுமதி 3.11.2020 அன்று வழங்கிய அ2/0998/2020 எண்ணிட்ட அலுவலக குறிப்பு கோப்பு மற்றும் 4) மாவட்ட ஆட்சித்தலைவர் கையொப்பமிட்ட கணியம்பாடி ஊராட்சி - ஒன்றியம் வேப்பம்பட்டு கிராம ஊராட்சி – பெரியபாலம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி – பழுதடைந்த சமையலறை கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.23,000/- மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி 2.11.2020 தேதியன்று வழங்கிய கோப்பு எண்.அ6/2105/2019 எண்ணிட்ட அலுவலக குறிப்பு கோப்பு ஆகியவற்றை ஆஜர் செய்தார். பின்னர், திரு.B.மணிகண்டன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) என்பவரிடம் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலக பதிவேடுகளை கேட்க, அவர் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.செந்தில்வேல் என்பவரால் கையொப்பமிடப்படாமல், உயர் அதிகாரிகளிடம் நேரடியாக கையொப்பம் பெற்ற வேலூர் மாவட்டத்தின் சில கிராம ஊராட்சிகளுக்கு உபரி நிதி (Surplus fund-2017-18) Standby Motor சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொண்டமைக்கு தொகை ரூ.54,71,000/- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி

கணக்கு எண்.1-க்கு விடுவித்து உத்திரவிடுதல் சம்மந்தப்பட்ட வழி வழியாக செல்லாத 22.10.2020 நாளிட்ட அ3/1699/2017 எண்ணிட்ட அலுவலக குறிப்பு கோப்பை ஆஜர் செய்தார். பின்னர், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனம் குறித்து, உதவி இயக்குனரிடம் கேட்க, அவர் தனக்கென ஒதுக்கிய வெள்ளை நிற பொலிரோ வாகனம் கட்டிடத்தின் போர்டிகோவில் நிறுத்தியிருப்பதாகவும், அந்த வாகனத்தின் பதிவு எண்.TN 23 G 1501 என்றும், அதன் ஓட்டுனர் குறித்து விசாரிக்க, அவர் அரசு வாகனத்தை திரு.வெற்றிவேல் முருகன் என்பவர் ஓட்டி வருவதாக தெரிவித்தார். மேற்படி அரசு வாகனத்தின் ஓட்டுனர் திரு.வெற்றிவேல் முருகன் என்பவரை அழைத்து, அவர் முன்னிலையில் சோதனை செய்ய அந்த வாகனத்தில் பணம் ஏதுமில்லை. மேலும், வாகன ஓட்டுனரிடம் அரசு வாகனத்தின் Log Book பற்றி கேட்க, அவர் அந்த பதிவேட்டை எடுத்து வந்து ஆஜர் செய்ததை பார்வையிட்டு, வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், உதவி இயக்குனரின் அரசு வாகன ஓட்டுனரிடம் ஏன் மே மாதம் 2020-ல் இருந்து Log Book எழுதப்படவில்லை என்று கேட்க, அவர் உதவி இயக்குனர் அவர்களின் மாதாந்திர நாட்குறிப்பை பார்த்துதான் Log Book-ஐ தான் எழுதி வந்ததாகவும், உதவி இயக்குனர் திரு.செந்தில்வேல் அவர்கள் தன்னிடம் மாதாந்திர நாட்குறிப்பு எதுவும் தன்னிடம் கொடுப்பதில்லை என்று சொன்னார். பின்னர், இது தொடர்பாக உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அவர்களிடம் கேட்டபோது, அவரும் தான் மாதாந்திர நாட்குறிப்பு எதுவும் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு கடந்த 10 மாத காலமாக அனுப்பவில்லை என்று கூறினார். இந்த வழக்கிற்கு தேவையான 6 ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்தான பணம் ரூ.92,000/- கைப்பற்றப்பட்டு, இந்த இருதுறை திடீர் கூட்டுசோதனை இன்று 07.11.2020-ஆம் தேதி விடியற்காலை சுமார் 03.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் உள்ள பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்படி அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனையின் ஆஜரில் இருந்த உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) மற்றும் அலுவலர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்கண்ட இருதுறை கூட்டு திடீர் சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறைகள் 06.11.2020 மாலை 18.10 மணி முதல் 07.11.2020 விடியற்காலை 03.00 மணி வரை தயார் செய்யப்பட்டது. இன்று 07.11.2020-ஆம் தேதி காலை சுமார் 05.00 மணியளவில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் சேர்ந்து நேற்று 06.11.2020 தேதி வேலூர் உதவி

இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் நடைபெற்ற இருதுறை கூட்டு திடீர் தணிக்கையின்போது தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத லஞ்சப்பணம் ரூ.92,000/-ஐ கைப்பற்றப்பட்டது. எனவே, திரு.R.செந்தில்வேல் (49/2020), த/பெ ராமசாமி, உதவி இயக்குனர் (ஊராட்சிகள்), உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) அலுவலகம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையில் கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.92,000/-, ஆவணங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை இந்த புகாருடன் நடவடிக்கைகாக ஒப்படைக்கின்றேன். ஒம்/-xxxxxxx (S. ஜோதி), துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9. இணைப்பு: மேலே கூறியவாறு.

Sir,

Received the complaint and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.14/2020, u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 07.11.2020 at 05.00 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original are sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and other copies are sent to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 07.11.2020, DSP/VAC/Vellore.

7/11/2020

HEMACHITHRA. K.S,
DSP/VAC/VELLORE